முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 769**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**06.11.2021**, சனிக்கிழமை

1. கலிவெல்ல பிறந்த ஞானியே
கந்தவேலன் என் மா தவயோகியே
அழியாமை தந்து இந்த உலகை மீட்க
அன்னதான சேவையாற்றும் ஆறுமுக அரங்கமகா ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
தானதர்ம சக்தி கொண்டு உலகமக்களை
தயவான மக்களாக மாற்றவந்த
3. வந்தநல் தவசியே யோகியே
வள்ளலே வாழுகின்ற ஞானியே
சிந்தை வைத்து உன் நாமஜெபத்தை
ஜெபிக்கும் மக்களெல்லாம் ஞானிகளாகி
4. ஆகியே கலியுகத்தில் மாற்றம் பெறுவர்
அவதார ஞானி உன் சூட்சுமம் அறிந்து
அழியாமை பெற்று அவர்களெல்லாம் ஞானிகள் ஆவர்
அகிலத்தை அரங்கன் உன் வேண்டலுக்காய் ஆறுமுகன் யான்
5. யானுமே ஞான லோகமாக்கி மாற்றுவேன்
ஞான ஆட்சி தந்து அருள்புரிவேன்
தானதர்ம சக்தி எங்கும் பரப்பி
தயாபரம் உள்ள மக்களாய் உலகோரை மாற்றி
6. மாற்றியே அரங்கன் நீ வேண்ட
மகத்துவத்தை ஆறுமுகன் யான் நடத்துவேன்
ஆற்றல்கூட்டி உன் சக்தி பெருகவே
அனுதினமும் உந்தனுக்குள் சூட்சும பலம்
7. பலமாக யானே இரங்கி
பழுதில்லா அருள் பலம் புரிகின்றேன்
வளமான மக்கள் பலரை ஒன்றிணைத்து
வாழும் ஞானி உன் தர்மம் நிலைக்க அருள்புரிவேன்
8. அருளாக ஆற்றலாக அகத்தீசன் முதலான ஞானிகள் துணையாக
பொருளாக புண்ணியமாக உன் சேவைக்கு
புதுபுது சக்திகள் ஊட்டி ஆறுமுகன் யான்
யானே பெருந்தயவாய் இருந்து

9. ஞாலமதில் உன் சுத்த சைவ நெறி
ஞானமாக எங்கும் பரவி உலகமாற்றம்
ஞானிகள் ஆட்சியாகவும் ஞானவான்கள் துணைபட நடக்க அருள்புரிவேன்
நாட்டிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–